**<u>அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை</u>**
***<u>Ang Mo Kio Tamil Methodist Church</u>***

***<u>ஆராதனை ஒழுங்கு / Order of Service</u>***
***<u>25th டிசம்பர் / December 2025</u>***
***<u>கிறிஸ்து பிறந்த திருநாள் / Christmas Service</u>***

✝ **ஆராதனைக்கு அழைப்பு** — **திரு . ஜேக்கப் ஜான்சன் பாபு**
Call to Worship — Mr. Jacob Johnson babu

<u>நடத்துபவர்:</u> உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும்

**<u>சபையார் :</u> பூமியிலே சமாதானமும் மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக**

<u>நடத்துபவர் :</u> இதோ எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்.

**<u>சபையார் :</u> உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமை உண்டாவதாக.**

<u>நடத்துபவர் :</u> இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்கு தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்.

**<u>சபையார் :</u> உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும் மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக.**

**இறைவணக்கப்பாடல்** — **பாடகர் குழு**
Introit — Choir

**ஜெபம்** — **திரு . ஜேக்கப் ஜான்சன் பாபு**
Prayer — Mr. Jacob Johnson babu

**<u>கிறிஸ்துமஸ் தினம்</u>**
**<u>கிறிஸ்து மெழுகுவர்த்தி</u>**
***<u>Christ Candle</u>***

**<u>லூக்கா 2:10-11</u>**

***10. இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்.***
***11. இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்.***

**<u>போதகர் மூன்று ஊதா ஒரு இளஞ்சிவப்பு மற்றும் வெள்ளை நிற மெழுகுவர்த்தியை கொழுத்துவர்</u>** — **மறைதிரு. விஜய் ஜோஸப்**
***<u>(The Pastor will light up three purple candles, one pink candle and the white candle):</u>*** — Rev. Vijay Joseph

**<u>அந்நேரத்தில் சொல்ல வேண்டியது:</u>**

**கிறிஸ்து நமக்காக வந்த நாளை கொண்டாடும் நாம், அவர் மூலமாய் வரும் நம்பிக்கை, சமாதானம், சந்தோஷம், அன்பு, இவற்றுடன் வரும் இரட்சிப்பு, நித்திய ஜீவனுக்காக அவரை போற்றுவோம் வணங்குவோம்.**

**<u>ஜெபம் :</u> மகிமையும் இரக்கமும்முள்ள ஆண்டவரே, உம்மையே வெறுமையாக்கி எங்களுக்காக வந்தீரே, உம்மை துதிக்கிறோம். எங்கள் மீது நீர் பாராட்டின உம்முடைய அன்பை என்றும் எண்ணிப் பார்த்து உமக்காய் ஜீவிக்க எங்களுக்கு கிருபை செய்யும், ஆமேன்**

✝ **தொடக்க பாடல்** — **சபையார் இணைந்து**
Opening Song — Congregation

**<u>மெய் பக்தரே, நீர், விழித்தெழும்பும்</u>**

*1. மெய் பக்தரே, நீர், விழித்தெழும்பும்,*
*சந்தோஷமாய் இந்நாளை வாழ்த்திடும்*
*இன்றைக்கு லோக மீட்பர் ஜென்மித்தார்,*
*வீண்ணோர் இவ்விந்தையைக் கொண்டாடினார்.*
*கர்த்தாதி கர்த்தர் மானிடனானார்,*
*ரட்சணிய கர்த்தாவாகத் தோன்றினார்.*

*2 இதோ! நற்செய்தி கேளும் இன்றைக்கே*
*இம்மானுவேல் தாவீதின் ஊரிலே*
*பூலோக மீட்பராகப் பிறந்தார்,*
*எல்லாருக்கும் சந்தோஷம் நல்குவார்*
*என்றே ஓர் தூதன் பெத்தலேம் மேய்ப்பர்க்கே*
*இராவில் தோன்றி மொழிந்திட்டானே.*

*3. அந்நேரம் வானோர் கூட்டம் மகிழ்ந்து*
*ஆனந்த பாட்டைப் பாடி இசைந்து*
*விண்ணில் கர்த்தாவுக்கு மா துதியும்*
*மண்ணில் நல்லோர்க்குச் சமாதானமும்*
*என்றல்லேலூயா பாடி வாழ்த்தினார்,*

*தெய்வீக அன்பின் மாண்பைப் போற்றினார்.*

*4. இச்செய்தி கேட்ட மேய்ப்பர் ஊருக்கு*
*அற்புத காட்சி காண விரைந்து,*
*யோசேப்புடன் தாய் மரியாளையும்*
*முன்னணைமீது தெய்வ சேயையும்*
*கண்டே தெய்வன்பை எண்ணிப் போற்றினார்,*
*ஆனந்தமாய் தம் மந்தைக்கேகினார்.*

**மாறி மாறி வாசித்தல்** **லூக்கா 1 : 68 - 79**
✝ Responsive Reading Luke 1 : 68 - 79

*<u>ஆராதனை நடத்துபவர் :</u> இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. அவர் தமது ஜனத்தைச் சந்தித்து அதற்கு மீட்பை உண்டுபண்ணினாரே,*

***<u>சபையார் :</u>* ஆதிமுதற்கொண்டிருந்த தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளின் வாக்கினால் தாம் சொன்னபடியே,**

*<u>ஆராதனை நடத்துபவர் :</u> தம்முடைய தாசனாகிய தாவீதின் வம்சத்திலே நமக்கு இரட்சணியக் கொம்பை ஏற்படுத்தினார்,*

***<u>சபையார் :</u>* இது நம்முடைய சத்துருக்களினின்றும், நம்மைப் பகைக்கிற யாவருடைய கைகளினின்றும் தப்புவிக்கும் இரட்சிப்பு.**

*<u>ஆராதனை நடத்துபவர் :</u> அவர் தமது பரிசுத்த உடன்படிக்கையை நினைத்தருளி, நம்முடைய பிதாக்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின இரக்கத்தைக் காட்டி,*

***<u>சபையார் :</u>* நமது பிதாவாகிய ஆபிரகாமுக்கு இட்ட ஆணையை நிறைவேற்றுவதற்கும்,**

*<u>ஆராதனை நடத்துபவர் :</u> நம்முடைய சத்துருக்களின் கைகளினின்று நாம் விடுதலையாக்கப்பட்டு,*

***<u>சபையார் :</u>* நாம் உயிரோடிருக்கும் நாளெல்லாம் பயமில்லாமல் அவருக்கு முன்பாகப் பக்தியோடும் நீதியோடும் ஊழியஞ் செய்ய அருளுவதற்குமே அப்படிச் செய்தார்.**

*<u>ஆராதனை நடத்துபவர்</u> : நீயோ பாலனே, உன்னதமானவருடைய தீர்க்கதரிசி என்னப்படுவாய்,*

***<u>சபையார் :</u>* நமது தேவனுடைய உருக்கமான இரக்கத்தினிமித்தம் பாவ மன்னிப்பினால் வரும் இரட்சிப்பைக் கர்த்தருடைய ஜனத்துக்குத் தெரியப்படுத்தும் பொருட்டு,**

*<u>ஆராதனை நடத்துபவர் :</u> அவருக்கு முன்னாக நடந்துபோய் அவர் வழிகளை ஆயத்தஞ் செய்வாய். அவ்விரக்கத்தினால் உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம்,*

***<u>சபையார் :</u>* அந்தகாரத்திலும் மரண இருளிலும் உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு வெளிச்சந்தரவும் நம்முடைய கால்களைச் சமாதான வழியில் நடத்தவும் நம்மைச் சந்திக்கும் என்பதே.**

**தந்தை போற்றி** **சபையார் இணைந்து**
✝ Gloria Patri Congregation

**தந்தை போற்றி**
**தனையே போற்றி**
**சுந்தர பரிசுத் தாவி போற்றி**
**ஆதியிலிருந்த வாறே போற்றி**
**நாதா இன்றும் என்றும் போற்றி. ஆமென்...**

**ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்**
Thanksgiving & Pastoral Prayer

**பரமண்டல ஜெபம்** **சபையார் இணைந்து**
Lord's Prayer Congregation

**சிறப்புப் பாடல்** **பாடகர் குழு**
Special Song Choir

**காணிக்கைப் பாடல்** **சபையார் இணைந்து**
✝ Offertory Song Congregation

**<u>ஆ! அம்பர உம்பரமும் புகழுந்திரு</u>**

**ஆ! அம்பர உம்பரமும் புகழுந்திரு**
**ஆதிபன் பிறந்தார்**

**ஆதிபன் பிறந்தார்,-அமலாதிபன் பிறந்தார்**

*1. அன்பான பரனே!- அருள் மேவுங் காரணனே!-நவ*
*அச்சய சச்சிதா - ரட்சகனாகிய*
*உச்சிதவானே!*

*2. ஆதம் பவமற,-நீதம் நிறைவேற,-அன்று*

*அல்லிராவினில்-தொல்லையிடையினில்*
*புல்லணையிற் பிறந்தார்.*

*3. ஞானியர் தேட, - வானவர் பாட, மிக*
*நன்னய, உன்னத -பன்னரும் ஏசையா*
*இந்நிலம் பிறந்தார்.*

*4. கோனவர் நாட,- வானவர் கொண்டாட,-என்று*
*கோத்திரர் தோத்திரஞ் சாற்றிட வே, யூத*
*கோத்திரன் பிறந்தார்.*

*5. விண்ணுடு தோண, மன்னவர் பேண.-ஏரோது.*
*மைந்தனின் சிந்தையமுந்திக் கலங்கிட*
*விந்தையாய்ப் பிறந்தார்.*

✝ ***பூலோகத்தாரே யாவரும்*** — ***சபையார் இணைந்து***
Doxology — Congregation

**பூலோகத்தாரே யாவரும்**
**கர்த்தாவில் களிகூருங்கள்**
**ஆனந்தத்தோடே ஸ்தோத்திரம்**
**செலுத்தி பாட வாருங்கள் ஆமென் ….**

✝ ***திருமறைப் பாடம்*** — ***திரு. சாமுவேல் தேவானந்தன்***
Scripture Reading — Mr. Samuel Devanandan
***ஏசாயா 9 : 2 - 7***
Isaiah 9 : 2 - 7

***அருளுரை*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Sermon — Rev. Vijay Joseph

✝ ***அர்ப்பணகீதம்*** — ***சபையார் இணைந்து***
Closing Song — Congregation

**<u>இத்தரையில் சந்தோஷமே</u>**

*1. இத்தரையில் சந்தோஷமே கிறிஸ்து பிறந்தாரே*
*மாந்தர் யாரும் களிகூறுங்கள்*
*வான்புவி பாடிடுதே. வான்புவி பாடிடுதே*
*வான்புவி புவி பாடிடுதே.*

*2. மேசியவாய் நம் இயேசுவையே*
*போற்றித் துதிப்போமே*
*பாவம் நீங்கிட, பாக்கியம் தந்திட*
*மனுருபம் ஆனாரே 2*
*மனுருபம் மருபம் ஆனாரே.*

*3. ஜாதிகளும் ஜனங்களும்*
*அவர் அன்பைப் போற்றுவார்*
*நீதியோடும் உண்மையோடும்*
*என்றென்றும் ஆளுவார்*
*என்றென்றும் ஆளுவார்*
*என்றென்றும் என்றும் ஆளுவார்*

✝ ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Closing Prayer & Benediction — Rev. Vijay Joseph

✝ ***ஆசீர்வாதப் பாடல்***
Benediction Song

**His name is wonderful, His name is wonderful,**
**His name is wonderful, Jesus my Lord.**
**He is the mighty King, Master of everything,**
**His name is wonderful, Jesus my Lord.**
**He's the Great Shepherd, The Rock of all ages,**
**Almighty God is He,**
**Bow down before Him, Love and adore Him,**
**His name is wonderful, Jesus my Lord.**

***We wish you a Merry Christmas***

✝ ***சபையார் நிற்கவும்*** / Indicates Congregation standing